உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவருட்பிரகாச வள்ளலாரென்னும் சிதம்பரம் இராமலிங்கப்பிள்ளை அவர்கள் திருவாய்மலர்ந்தருளிய திருத்தணிகை

# சுப்பிரமணியா பதிகங்களும

நடராஜர்பேரில் கீர்த்தனைகளும்

கண்ணிகளும்கும்மிகளும்

அடங்கியிருக்கிறது.

இஃது

சிதம்பரம்.

பு. வே. சுந்தரம்பிள்ளை கேட்டுக்கொண்டபடி

இவை

சரவணபுரம

சண்முகமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு

புரசைபாக்கம்.

ஏழுமலைப்பிள்ளையவர்களது

விவேகவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப் பட்டது.

விக்குருதிஙு.

ஒனபதாம புத்தகம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருத்தணிகை

# சுப்பிரமணியர்பேரில்பதிகங்கள்

சீர்பூத்தவருட்கடலே கரும்பேதேனே செம்பாகேயெனதுகுலதெய்வமேநற், கூர்பூத்தவெண்மலர்க்கையரசேசாந்த குணக்குன்றேதணிகைமலைக்கோவேஞானப், பேர்பூத்தநின்புகழைக்கருதியேழைபிழைக்கவருள்செய்வாயோ பிழையைநோக்கிப, பார்பூத்தபவத்திலுறவிடினென்செய்கேன் பாவியெனந்தோவன் பயந்தீரேனே. (க)

தீராததுயர்க்கடலிலழுந்திநாளுந்தியங்கியழுதேங்குமிந்தச்சேய்க்குநீகண், பாராதசெயலென்னே யெந்தாயெந்தாய் பாவியெனவிட்டனையோபன்னாளாக, வோராயவருள்தருவாயென்றே யேமாந்திருந்தேனே என்செய்கேன்யாருமில்லேன், சீராருந்தணிகைவரை யமுதேயாகித் தெய்வமேநின்கருத்தைத்தெளிந்திலேனே. (உ)

தெளிக்குமறைப்பொருளேயென்னன்பேயென்றன் செல்வமே திருத்தணிகைத்தேவேயன்பா, களிக்குமறைக்கருத்தேமெய்ஞ்ஞானநீதிக்கடவுளே நின்னருளைக்காணேனின்னும், சுளிக்குமிடித்துயரும் யமன்கயறுமீனத் தொடர்புமலத்தடர்புமனச்சோர்வு மந்தோவளிக்

குமெனையென் செயுமோவறியே னின்றனடித்துணை யேயுறுதிதுணைமற்றன்றியுண்டோ. (௩)

உண்டாயஉலகுயிர்கட்மைக்காக்க வொளித்திருந்த வ்வுயிர்வினைக ளொருங்கேநாளுங், கண்டாயேயிவ்வே ழைகலக்குதன்மைகாணுயோபன்னிரண்டுகண்கள்கொ ண்டோய், தண்டாதநின்னருட்குத்தகுயோவிட்டாற்ற ருமமோதணிகைவரைத்தலத்தின்வாழ்வே, விண்டாதி தேவர்தொழுமுதலேமுத்தி வித்தேசொற்பதங்கடந்த வேற்கையானே. (௪)

கையாதவன்புடையாரங்கைமேவுங்கனியேயென்னு யிரே யென்கண்ணேயென்றும், பொய்யாத்பூரணமே தணிகைஞானப்பொருளேநின்பொன்னருளைப்போதி யான்பெற்றால், உய்யாதகுறையுண்டோ துயர்சொல் லாமலோடுமே யமன்பாசமொய்துபோமென், ஐயாநி ன்னடியரொடும் வாழ்வேனிங்காருனையல்லா லெனக்கி ன்றருள்செய்வாயே. (௫)

வாய்க்குமுனதருளன்றே யந்தோநாளும் வழிபார்த் திங்கிளைக்கின்றேன்வருந்துமபொல்லா, நோய்க்குமுறு துயர்க்குமிலக் கானேன்மாழ்கி நொந்தேநின்னருள்கா ணேனுவனும்பாசத், தேய்க்குமவன்வரிவலனுக்கியாது சொல்வே னென்செய்கேன் றுணையறியா வேழையே னே; தூய்க்குமாரகுருவேதென்றணிகைமேவுஞ்சோதி யேயிரங்காயோதொழும்பாளற்கே. (௬)

ஆளாயோதுயாரக்கர்வீழ்ந்து மாழ்கியையாவோவெ ன்னுமுறையை யந்தோசற்றுங், கேளாயோவென்செ

ய்கேனெந்தாயன்பர்கிளத்துமுனதருளெனக்குக்கிடையாதாகில், நாளாயோகடுவன்வரிலென்செய்வாரே நாயினேனென்சொல்வேனுணுவேனே, தோளாவோர்மணியேதென்றணிகைமேவுஞ்சுடரோயென்னறிவே சிற்சுகங்கொள்வாழ்வே. (எ)

வாழ்வேநற்பொருளேநன்மருந்தே ஞானவாரிதியேதணிகைமலைவள்ளலேயான், பாழ்வேலைனுங்கொடியதுயருண்மாழ்கிப் பதைத்தாயாமுறைசேர் நின்பதத்துக்கென்றே, தாழ்வேனீதறிந்திலேயோநாயேன்மட்டுந்தயவிலேயோநான்பாவிதானோபார்க்குள், ஆழ்வேனென்றயல்விட்டாணியேயோவச்சேர விங்கென்செய்கேனண்ணவண்ணா. (அ)

அண்ணாவேநின்னடியையன்றிவேறோர் தரவிங்கறியேனெஞ்சழிந்துதுன்பாற், புண்ணாகவன்றனை யின்னும்வஞ்சர்பாற்போய்ப்புலர்ந்துமுகவாட்டமுடன்புலம்பினிற்கப், பண்ணாதேயாவனிவன்பாவிக்குள்ளும் படுபாவியென்றென்னைப்பரிந்துதள்ள, எண்ணாதேயான்மிகவுமேழைகண்டா யிசைக்கரியதணிகையில்வீற்றிருக்குங்கோவே. (கூ)

கோவேநற்றணிகைவரை யமர்ந்தஞானக் குலமணியேகுகனேசற்குருவேயார்க்குந், தேவேயென்விண்ணப்பமொன்றுகேண்மோ சிந்தைதனினினைக்கவருள்செய்வாய்நாளும், பூவேயுமயன்றிருமால் புலவர்முற்றும்போற்றுமெழிற்புரந்தானெப் புவியுமோங்கச், சேவேறும்பெருமானிங்கிவர்கள்வாழ்த்தல் செய்துவக்குநின்னிரண்டுதிருத்தாட்சீரே. (ய)

ற்றியருட்குருவாயென்னைச்சிறுகாலையாட்கொண்டதேவதேவே. (எ)

ஞாலமெலாம்படைத்தவனைப்படைத்த முக்கணாயகனேவடிவேற்கை நாதனேநான், கோலமெலாங் கொடியேனற்குணமொன்றில்லேன்குற்றமேவிழைந்தேனிக்கோதுளேனைச், சாலமெலாஞ்செயுமடவார் மயக்கிநீக்கிச் சன்மார்க்கமடையவருட்டருவாய்ஞானச், சீலமெலாமுடையவருட்குருவாயென்னைச் சிறுகாலையாட்கொண்டதேவதேவே. (அ)

கற்பனையேயெனுமுலகச்சழக்கிலெந்தோ காலூன்றிமயங்குகின்ற கடையனேனைச், சொற்பனமிவ்வுலகியற்கையென்றுநெஞ்சந்துணிவுகொளச்செய்வித்துஅவன்பொற்றாளை, அற்பகலுநினைந்துநனிந்துருகிஞானவானந்தபோகமுறவருளல்வேண்டுஞ், சிற்பரசற்குருவாய்வந்தென்னைமுன்னே சிறுகாலையாட்கொண்டதேவதே

பன்னிருகண்மலமலர்ந்தகடலேஞானப் பராஞ்சுடரேயாறுமுகம்படைத்தகோவே, என்னிருகண்மணியே எனென்றுயேன்னையீன்றுனேயென்னரசே யென்றன்வாழ்வே, மின்னிருவர்புடைவிளங்கமயின்மீதேறிவிரும்புமடியவர்காணமேவுந்தேவே, சென்னிமினின்னடிமலர்வைத்தென்னைமுன்னே சிறுகாலையாட்கொண்ட தேவதேவே.

திருச்சிற்றம்பலம்.

சுப்பிரமணியர்பதிகம்.

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

# நடராசர் பேரிற் கீர்த்தனை

இராகம் - காம்போதி அட தாளசாப்பு.

## பல்லவி.

ஆடியபாதமன்றுடியபாதம் ஆடியபாதநின்றுடியபாதம்

## அநுபல்லவி.

பாடியவேதங்கள்தேடியபாதம்
பத்திசெய்பத்தர்க்குதித்திக்கும்பாதம்
நாடியயாதவன்தேடியபாதம்
நாதாந்தநாட்டுக்குநாயகபாதம். (ஆடியபாதம்)

## சரணங்கள்.

தீராதவல்வினைதீர்க்கின்றபாதந்
தெய்வங்களெல்லாந்தெரிசிக்கும்பாதம்
வாராவரவாகிவந்தபொற்பாதம்
வஞ்சமனத்தில்வசியாதபாதம். (ஆடிய) (க)
ஆராவமுதாகியண்ணிக்கும்பாதம்
அன்பருளத்தேயமர்ந்தருள்பாதம்
நாராயணன்விழிநண்ணியபாதம்
நான்புனைபாடல்நயந்தபொற்பாதம் (ஆடிய) (உ)
நவ்வலசொல்லாம்நயக்கின்றபாதம்
நாதமுடிவில்நடிக்கின்றபாதம்

வல்லவர்சொல்லெல்லாம்வல்லபொற்பாதம்
மந்திரயந்திரதந்திரபாதம் (ஆடிய) (௩)
எச்சமயத்துமிலங்கியபாதம்
எள்ளுக்குளெண்ணெய்போலெங்கும்பாதம்
அச்சந்தவிர்த்தென்னையாட்கொண்டபாதம்
ஆனந்தநாட்டுக்கதிபதிபாதம். (ஆடிய) (௪)
தேவர்களெல்லாருஞ்சிந்திக்கும்பாதம்
தெள்ளமுதாயுளந்தித்திக்கும்பாதம்
மூவருங்காணுமுழுமுதற்பாதம்
முப்பாழுக்கப்பால்முளைத்தபொற்பாதம் (ஆடிய) (௫)
துரியவெளிக்கேவுரியபொற்பாதம்
சுகமயமாகியசுந்தரபாதம்
பெரியபொருளென்றுபேசும்பொற்பாதம்
பேரெல்லாந்தந்தபெரும்புகழ்ப்பாதம் (ஆடிய) (௬)
சாகாவரந்தந்ததாரகப்பாதம்
சச்சிதானந்தசகோதரபாதம்
தேகாதியெல்லாஞ்சிருஷ்டிக்கும்பாதம்
திதிமுதலைந்தொழில்செய்கின்றபாதம் (ஆடிய) (௭)
ஓங்காரபீடத்தொளிர்கின்றபாதம்
ஒன்றாயிரண்டாகியோங்கியபாதம்
தூங்காததூக்கத்தில் தூக்கியபாதம்
துரியத்திலூன்றிதுலங்கியபாதம் (ஆடிய) (௮)
ஐவண்ணமுங்கொண்ட அற்புதபாதம்
அயயரெல்லார்க்குமமுதானபாதம்

கைவண்ணநெல்லிக்கனியாகும்பாதம்
கண்ணுங்கருத்துங்கலந்தபொற்பாதம் (ஆடிய) (௯)
ஆருயிர்க்காதாரமாகியபாதம்
அண்டபிண்டங்களளிக்கின்றபாதம்
சாருயிர்க்கின்பந்தருகின்றபாதம்
சத்தியஞானதயாநிதிபாதம் (ஆடிய) (௰)
தாங்கியெனைப்பெற்றதாயாகும்பாதம்
தந்தையுமாகித்தயவுசெய்பாதம்
ஓங்கியென்னுள்ளேயுறைகின்றபாதம்
உண்மைவிளங்கவுரைத்தபொற்பாதம் (ஆடிய) (௰௧)
எண்ணியவாறேயெனக்கருள்பாதம்
இறவாநிலையிலிருத்தியபாதம்
புண்ணியர்கையுட்பொருளாகும்பாதம்
பொய்யருளத்திற்பொருந்தாதபாதம் (ஆடிய) (௰௨)
ஆனந்தத்துன்னும்அமர்ந்தபொற்பாதம்
ஆதியநாதியுமாகியபாதம்
மானந்தமில்லாவென்வாழ்முதற்பாதம்
மண்முதலைந்தாய்வழங்கியபாதம் (ஆடிய) (௰௩)
அருட்பெருஞ்சோதியதாகியபாதம்
அம்மையுமப்பனுமாகியபாதம்
பொருட்பெரும்போகம்புணர்த்தியபாதம்
பொன்வண்ணமாகியபுண்ணியபாதம் (ஆடிய) (௰௪)
நாரணனாதியர்நாடரும்பாதம்
நான்றவத்தாற்பெற்றநற்றுணைதெய்வம்

ஆரணமாகமம்போற்றியபாதம்
ஆசைவிட்டார்க்கேஅணிமையாம்பாதம் (ஆடிய) (௰௫)
திருச்சிற்றம்பலம்.

கண்ணிகள்.

மின்னிடையாள்காணவிளங்குமன்றுளாடுகின்றாய்
என்னுடையாயுன்றனிணையடித்தாளோவாதோ. (க)
வள்ளமுதேயின்பமனுயமன்றிலாடுகின்றாய்
என்னமுதேயுன்றனிணையடித்தாளோவாதோ. (உ)
நண்ணியமெய்யன்பர்நயக்கமன்றிலாடுகின்றாய்
புண்ணியனேயுன்றன்பொன்னடித்தாளோவாதோ. (ந)
அன்பரின்பங்கொள்ளநடமம்பலத்தேயாடுகின்றாய்
இன்புறவாமுன்றனிணையடித்தாளோவாதோ. (ச)
நாலுணர்வாலுண்ணுணர்வினைக்கநடமாடுகின்றாய்
மாலறியாவுன்றன்மலர்ப்பாதளோவாதோ. (௫)
எள்ளருறவம்பலித்தேயின்பநடமாடுகின்றாய்
வள்ளலேயுன்றன்மலரடித்தாளோவாதோ. (சா)
சைவனிலைத்துத்தழைத்தோங்கவாடுகின்றாய்
தெய்வமணியேதிருவடித்தாளோவாதோ. (எ)
எல்லாருமின்புற்றிருக்கநடமாடுகின்றாய்
வல்லாரின்வல்லாய்மலர்ப்பாதளோவாதோ. (அ)
அவமேகழிந்தின்பம்அன்பர்கொளவாடுகின்றாய்
சிவமேசிவனினது திருவடித்தாளோவாதோ. (கூ)

வில்வமோபாலையிளிர்ந்தசைவாடுகின்றாய்
செல்வமேயுன்றன்திருமேனிநோகாதோ. (௰)
தற்பரமாமன்றிற்றனிநடனமாடுகின்றாய்
சிற்பரமேயுன்றன்றிருமேனிநோவாதோ. (௰௧)

திருச்சிற்றம்பலம்.

போகமாட்டேன்பிறரிடத்தே பொய்யிற்கிடந்து புலர்ந்துமனம், வேகமாட்டேன்பிறிதொன்றும் விரும்பமாட்டேன்பொய்யுலகன், ஆகமாட்டேன் அரசேயென்னப்பாவென்றணீயாநான், சாகமாட்டேனுனைப்பிரிந்தாற்றரிக்கமாட்டேன்கண்டாயே. (௧)

செல்லமாட்டேன் பிறரிடத்தே சிறிதுந்தரியேன் றீமொழிகள், சொல்லமாட்டேன்யினிக்கணமுந் துயரமாட்டேன்சோம்பல்மிடி, புல்லமாட்டேன்பொய்யொழுக்கம்பொருந்தமாட்டேன்பிறவுயிரைக்,கொல்லமாட்டேன்வுனையல்லால்குறிக்கமாட்டேன்கண்டாயே. (௨)

கருணைப்பெருக்கேயானந்தக்கனியேயென்னுட்கலந்தொளிரும், தருணச்சுடரேயெனையீன்ற தாயேஎன்னைத்தந்தோனே, வருணப்படிகமணிமலையே யென்றில்நடஞ்செய்வாழ்வேநற், பொருணற்பதியேயினித்துயரம்பொறுக்கமாட்டேன்கண்டாயே. (௩)

வெறுக்கமாட்டேனுன்றனையேவிரும்பிப்பிடித்தே துயர்சிறிதும்,பொறுக்கமாட்டேனுலகோர்போற்பொ

ய்யிற்கிடந்துபுரண்டினிநான், சிறுக்கமாட்டேன்அரசே
நின்றிருத்தாளாணைநின்னுணை, மறுக்கமாட்டேன்வழங்
குவனவெல்லாம்வழங்கிவாழியவே. (௪)

திண்ணம்பழுத்தசிந்தையிலே தித்தித்துலவாச்சு
யஞ்சோதி, வண்ணம்பழுத்ததனிப்பழமே மன்றில்வி
ளங்குமணிச்சுடரே, தண்ணம்பழுத்தமதியமுதே தரு
வாயிதுவேதருணமென்றேன், எண்ணம்பழுத்ததினிச்
சிறியேன்யிறையுந்தரியேன்தரியேனே. (௫)

நாட்டுக்கிசைந்தமணிமன்றில்ஞானவடிவாய்நடஞ்
செயருள், ஆட்டுக்கிசைந்தபெருங்கருணையப்பாவென்
றனரசேயென், பாட்டுக்கிசைந்தபதியே ஓர்பரமானந்
தப்பழமேமேல், வீட்டுக்கிசைந்தவிளக்கேயென்விவே
கம்விளங்கவிளக்குகவே. (௬)

திருச்சிற்றம்பலம்.

## கும்மிப்பாடல்.

கும்மியடிப்பெண்கள்கும்மியடி
குணபாதத்தைநீக்கியேகும்மியடி
நம்மையாளும்பொன்குஞ்சிதபாதனை
நாடிக்கும்மியடியுங்கடிபதம்பாடிக்கும்மியடியுங்கடி.(௧)

தன்னகரில்லாத்தலைவனடி-யெந்தன்
தந்தையுந்தாயுமானவனடி
இந்திரன்மாலயன்தேடியுங்காணாத
யிந்தநடஞ்செய்யும்பாதனடி (கும்மி) (௨)

வஞ்சியர்மோகந்தவிர்த்தவண்டி-அப்பன்
மண்முதலண்டமால்நின்றவண்டி
குஞ்சிதாஞ்சிதபாதனடி-என்னைக்
கூடிமருவியநாதனடி (கும்மி) (௩)

சின்னவயதிலென்னையாண்டவண்டி-சுயஞ்
செஞ்சுடர்பொன்மேனியானவனடி
இன்னலறிந்தருள்நாதனடி-ஐயன்
என்னுளமர்ந்தபொற்பாதனடி (கும்மி) (௪)

வையகமெல்லாங்காத்தவண்டி-அப்பன்
வஞ்சியுமையாளைச்சேர்ந்தவண்டி
பொய்மையால்நீக்கிநம்மையாண்டவண்டி-நம்
புந்தியமர்ந்தசிற்போதனடி (கும்மி) (௫)

காமந்தவிர்த்தென்னையாண்டவண்டி-யெந்தன்
காதலனானசுகோதனடி
போனகந்தந்தபுனிதனடி-அய்யன்
பொன்னடிகாட்டிப்புணர்ந்தவண்டி (கும்மி) (௬)

அன்பர்குடிசைநுழைந்தவண்டி-அது
அல்லாதபேர்களைவிண்டவண்டி
இன்பந்துதிக்கின்றபாதனடி-யவன்
யெங்குநிறைகின்றஜோதியடி (கும்மி) (௭)

அண்டசராசரம்விண்டவண்டி-அதற்
கப்பானமேனிலைநின்றவண்டி
தொண்டர்களிக்கும்பொற்பாதனடி-சிவ
ஜோதிதிருநடராஜனடி (கும்மி) (அ)

ஆரணமாகமமேலவண்டி-அண்டர்
அரியயன்போற்றும்பாதனடி
காரணக்காரியமேவவண்டி-ஐயன்
கனகசபைக்கொருஆண்டவண்டி (கும்மி) (௯)

பூரணவியாபகபோதனடி-அன்பாய்ப்
போற்றுமடியரைக்காத்தவண்டி
வாரணமேலுறப்போர்த்தவண்டி-ஐயன்
வல்லிசிவகாமமணாளண்டி. (கும்மி) (௰)

சித்தர்கணுமெஞ்செகதீசனடி
ஜீயர்விஷயதயாளனடி
முத்தர்கள்பாடியகர்த்தனடி-அவன்
முந்திமறைதொழும்வித்தகண்டி (கும்மி) (௰௧)

பராபரபூரணகாரணண்டி-எயன்
பாசந்தவிர்த்தருள்போதனடி
மாறாக்கருணைதயாளனடி-மகா
தேவனடியுமைபாகனடி. (கும்மி) (௰௨)

திருச்சிற்றம்பலம்.